International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 03 July to September 2025 www.irjtsjournal.org

சலவை மொட்டும் சமூகச் சிந்தனையும்

Salavai Mottu and social thought

முனைவர் பீ. பெரியசாமி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, ஆரணி, திருவண்ணாமலை- 632317,

Dr. B. Periyaswamy

Assistant Professor, Department of Tamil

Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India

https://orcid.org/0000-0002-7395-9699

ஆய்வுச்சுருக்கம்

அப்துல்ரகுமானின் கவிதைக்கென்று ஒரு தனி இரசிகர் கூட்டம் என்றும் உண்டு. அவ்வகையில் நான் இரசித்த சலவைமொட்டு எனும் நூலில் உள்ள சமூக சிந்தனையை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. இதில் தாஜ்மஹல் காதலின் சின்னம் என்றும் அரசனின் பணத் திமிர் என்றும் விவாதித்து, அது காதலின் சின்னமே என்றுரைத்தலும், ஒரு பெண் தாயாக, மனைவியாக, சகோதரியாக இவ்வுலகில் எவ்வாறு அன்பின் அடையாளமாய் வாழ்கிறாள் என்பதையும், வறுமையின் கொடுமையையும், பழைமையால் வரும் ஆபத்தையும், காதலையும், ஊடலையும், காமத்தையும், புகைப்பிடித்தல் பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளது.

Abstract

There is also a separate audience for Abdul Rahman's poetry. In this way, this article examines the social thinking in the book Salavai Mottu, which I liked. It discusses the Taj Mahal as a symbol of love and the arrogance of the king's money, saying that it is a symbol of love, how a woman lives in the world as a symbol of love as a mother, wife, sister, the cruelty of poverty, the danger of old age, love, infatuation, lust, and smoking.

முக்கியச் சொற்கள்

அப்துல்ரகுமான், சலவைமொட்டு, சமூக சிந்தனை, தாஜ்மஹல், வறுமை, பெண்மை, காதல்

Key words

Abdul Rahman, Salavai Mottu, Social Thought, The Taj Mahal, Poverty, Women, Love

முன்னுரை

அப்துல்ரகுமான் சிறந்த கவிஞர் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அவர் சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதை சலவைமொட்டு எனும் நூல் நமக்கு எடுத்துரைக்கின்றது. இந்நூலில் பல்வேறு மொழிக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளை அழகாக தமிழில் மொழிபெயர்த்து தந்ததோடு மட்டும்

நில்லாமல், அவற்றினைப் பற்றிய தமது கருத்துக்களையும் ஆழமான சிந்தனைகளையும் எடுத்துரைத்துள்ளார் என்பது மேலும் ஒரு சிறப்பு. இந்நூலில் உள்ள கவிதைகள் எடுத்துரைக்கும் சமூக சிந்தனைகள் குறித்து இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

அப்துல்ரகுமான்

அப்துல் ரகுமான் மதுரையில் உருதுக் கவிஞரான மஹி என்ற சையத் அஹமத் மற்றும் ஜைனத் பேகம் ஆகியோருக்கு நவம்பர் 9, 1937 அன்று மகனாகப் பிறந்தார். "புதுக்கவிதையில் குறியீடு" என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். இவர் "கவிக்கோ" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். புதுக்கவிதை உலகில் தனித்தடம் பதித்தவர். 1961 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

"வானம்பாடி" இயக்கக் கவிஞர்களுடன் இணைந்து செயல்பட்டவர். உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தனது கவிதைகளை வெளிப்படுத்தினார். மரபுக்கவிதையின் ஆழத்தையும், புதுக்கவிதையின் அழகையும் இணைத்து கவிதைகள் படைப்பதில் வல்லவர். ஹைக்கூ, கஜல் போன்ற பிறமொழி இலக்கிய வடிவங்களை தமிழில் அறிமுகப்படுத்திப் பரப்பியதில் முக்கியப் பங்கு வகித்தவர். கவியரங்கங்களில் தனது தனித்துவமான பேச்சாலும், சிலேடை வார்த்தைகளாலும் மக்களைக் கவர்ந்தார். "கவிராத்திரி" என்ற புதுமையான கவியரங்க வடிவத்தை அறிமுகப்படுத்தியவர்.

பால்வீதி, நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை, அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, விலங்குகள் இல்லாத கவிதை, சொந்தச் சிறைகள், ஆலாபனை ஆகிய கவிதை நூல்களைப் படைத்தவர். புதுக்கவிதையில் குறியீடு, கம்பனின் அரசியல் கோட்பாடு ஆகிய ஆய்வு நூல்களை இயற்றியவர்.

இவரது தமிழ்ப்பணிக்காக 1999 ஆம் ஆண்டில் "ஆலாபனை" என்ற கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதமி விருது, கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தமிழன்னை விருது, கம்பர் விருது, கலைஞர் விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது படைப்புகள் சமீபத்தில் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

சலவை மொட்டு

இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் மனித உறவுகளின் சிக்கல்கள், சமுதாய அவலங்கள், அரசியல் சீர்கேடுகள் மற்றும் நவீன வாழ்க்கை முறை சார்ந்த பிரச்சனைகளை ஆழமாகவும், நுட்பமாகவும் எடுத்துரைக்கின்றன. அப்துல் ரகுமானின் தனித்துவமான கவிதை நடையான படிமங்கள்,

குறியீடுகள் மற்றும் எளிய நடையில் ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்துதல் ஆகியவை இந்தக் கவிதைகளில் காணப்படுகின்றன.

வாழ்க்கைப் போராட்டம்

வாழ்வதற்காக இங்கு ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவரும் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். அதெல்லாம் தனிப்பட்ட மனிதனின் போராட்டாக நீர்த்துப்போவதைக் கண்டுக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், சமூகப் போராட்டமாக அது மாறும்போது அது விதைக்கும் விதை சமூக மாற்றத்தின் ஆலமரமாக மாற்றப்படுவதையும் கண்டிருக்கிறோம். அப்படியான ஒரு கவிதை அஸ்ஸாமியப் புதுக்கவிஞர் ஸேமகாந்த் பரூவாவிடமிருந்து உதிர்த்தது.

எங்கள் இதயங்களைச்
செந்துணிவால்
ஒன்று கூட்டுவோம்
....
காலங்களின் பசி
எங்கள் வயிறுகளில்
போரிடுகிறது

பிரமபுத்திராவின் நீரை
மீண்டும் நாம்
நம் இதயக் குருதியால்
வண்ணம் ஏற்றுவோம்
இதில்
நம் வாழ்க்கையின
அழைப்பு இருக்கிறது
யாருக்கு?
எனக்கு
உனக்கு
நம்மைப் போன்ற
ஆயிரக் கணக்கானவர்க்கு
....

சகுந்தலா!
போராட்டத்தின் கவிதை
சாகாது

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

நாம்
ஓய்வெடுக்க முடியாது (சலவை மொட்டு, பக்.15-18)

இதில், நம் வாழ்க்கை களவாடப்பட்டுவிட்டது. அதை மீட்க நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். அப்போதுதான் மீட்க முடியும் என்பதை அருமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளாலும் பெருமுதலாளிகளாலும் நம் வாழ்க்கை 1980களில் மட்டுமல்ல இன்றளவும் சுரண்டப்பட்டுதான் வருகின்றது. இதனால் ஏற்படும் வறுமை குறித்து வள்ளுவர்,

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். (குறள்- 1045)

என்கிறார். அதாவது, வறுமை எனப்படுவதிலேயே, உலகத்தாரால் சொல்லப்படும் அனைத்து வகைப்பட்ட துன்பங்கள் எல்லாம் உட்சென்று அடங்கிவிடுகின்றது என்பதாம். இந்நிலையைப் பாரதிதாசன் தன் மிடிமை தீரக் கடமை புரிவீர்! எனும் கவிதையில்,

மக்களை நடத்தும் சட்டமும் நடப்பும்
மாய்ந்திடும் பசிநோய் வளர்த்திடல் அறிந்தீர்!
தக்கது நாடி ஒற்றுமை நாடி வலியினால்
தகர்த்திட வேண்டிக் கொதித்திடுவீர்கள்!
கொக்கும் இரைபெற இருந்திடும்; வந்தால்
கொத்திடத் தயங்கிப் பசித்திடல் உண்டோ!
கைக்குள் கொண்டுளீர் மீட்சி மருத்தினைக்
கடமை பரிகுவீர் எழுக தொண்டரே! (பாரதிதாசன் கவிதைகள், ப.495)

என்று எடுத்துரைத்துள்ளார். இக்கவிதையில் சட்ட திட்டங்கள் வறுமைப் போக்கவில்லை. அதை எப்படி போக்க வேண்டும் என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். கொக்கு தன் இரை பெற மீனை உணவாக்க வேண்டுமெனில் அதனை கொத்தி உயிர்போக செய்தாக வேண்டும். இல்லையெனில் பசியால் அது இறந்துவிடும். அதுபோல் நாமும் போராடியே ஆக வேண்டும் நம வறுமையைப் போக்கிக் கொள்ள இச்சட்டதிட்டங்களுக்கு எதிராக என்பதை எடுத்துரைக்கின்றது.

முதலாளித்துவத்தின் காரணமாக சமத்துவமின்மை நிலவுவதை வைரமுத்து,

சுதந்திரம்
சமத்துவத் தேரின் வடம்
சமத்துவத் தேரிழுக்கச்
சமூகம் தயார்

ஆனால்
பல்லக்குப் போகமட்டும்
முதலாளித்துவம் போட்ட
ஒற்றையடிப் பாதையிலே
ஓடுமா இந்தத் தேர்? (வைரமுத்து கவிதைகள், ப.145)

என முதலாளித்துவத்திற்கு எதிராக தனது கவிதை சாட்டையை சுழற்றியுள்ளார்.

தண்ணீரின் தாகம்

ஒருகாலத்தில் துக்கர் எனும் நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியது. அதனைப் போக்க அந்நாட்டின் அரசன் கால்வாய் ஒன்றை உருவாக்கினான். ஆனால், அக்கால்வாயில் தொடர்ந்து நீர் வர வேண்டும் என்றால் ஒரு பெண்ணைப் பலியிட வேண்டும் என்றனர். அப்போது அவனின் மருமகள் பஹூரூல் தன்னை மாய்த்துக் கொள்ள துணிந்தாள். அவளை உயிரோடு புதைக்க ஏற்பாடாயிற்று அப்போது,

மனிதர்களே! மனிதர்களே!
கொஞ்சம் கேளுங்கள்
என் முன்னாலும் பின்னாலும்
கற்களை அடுக்குங்கள்
ஆனால்,
என் மார்பகத்தை மட்டும்
மூடாமல் விட்டுவையுங்கள்
இப்பக்கள் வருவார்கள்
என் பிள்ளைகள்
அவர்களுக்கு
ஒருவாய் பாலாவது
ஊட்ட வேண்டும் நான் (சலவை மொட்டு, ப.21)

என்று பாடுவதிலிருந்து அவளின் தாய்பாசம் வெளிப்படுகின்றது. அதுமட்டுமா? என் கைகளை மட்டும் விட்டு வையுங்கள் இப்பக்கம் வருவான் என் உடன் பிறந்தோன் ஆசையோடு அவனை நான் அணைக்க வேண்டும் எனும்போது அவளின் உடன் பிறந்தோர் மீதான பாசமும், என் கண்களை மட்டும் மறைக்காமல் விட்டுவிடுங்கள் இப்பக்கம் வருவான் என் மணவாளன் அவன் உருவத்தை என் கண்களில் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்பதில் அவள் கணவன் மீதான பாசமும் வெளிப்படுகின்றது. எப்போது பெண்கள் பாசத்திற்கு உரியவர்கள்.அவர்கள் தியாகத்தின் மருஉருவானவர்கள் என்பதை தோக்ரி மொழி நாட்டுப்புறப் பாடல் நமக்கெல்லாம் எடுத்துரைக்கின்றது.

மரபு தேவையா?

மரபு என்றால் சிலருக்கு கற்கண்டு, சிலருக்கு புளியங்காய், பலருக்கு பாகற்காய். சில மரபுகளை நாம் இன்றளவும் பயன்படுத்திதான் வருகின்றோம். இவைகள் நம் பண்பாட்டையும் நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும் எடுத்துரைப்பவைகளாக உள்ளன. ஆனால், அதற்காக புதுமைகளை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்பது எவ்வளவு பெரிய மூடதனம். அதனைச் சிந்திக் கவிஞர் கோவர்த்தன்,

சோர்ந்து நடக்கிறது
ஒரு மாட்டு வண்டி;
பழசாகிப் போன
மரபைப் போல!
அதைப் போலவே
சோர்ந்து நடக்கிறது
மாடு,
எந்திரத்தனமாக;
பெரிய பாரம்
துயரத்தை ஒத்திருக்கிறது
இந்த பயங்கர
வேதனைச் சுமையின் மேல்
கால் கைகளைப் பரப்பிச்
சுகமாக உறங்கிக் கொண்டிருக்கிறான்
களைத்துப் போன
வண்டி ஓட்டி (சலவை மொட்டு, ப.26)

நாம் பாரங்களை ஏற்றிச் செல்ல எத்தனையோ வண்டிகள் வந்த பிறகும் ஏன் மாட்டு வண்டியையும் வண்டி ஓட்டியையும் பாரம் சுமக்க செய்ய வேண்டும் என்று சிந்தியுங்கள். அவர்களுக்கும் கொஞ்சம் ஓய்வு கொடுங்களேன். இதற்கு அப்துல்ரகுமான் சொல்கிறார்,

மனிதர்களைப் போல மரபுகளுக்கும் மரணம் உண்டு என்பதை ஏற்க மறுக்கிறோம். பழமையானவர், பழகிவிட்டவர், பன்பட்டவர் என்பதற்காகப் பாட்டனின் பிணத்துக்கு நாம் பட்டாபிஷேகம் செய்வதில்லை. ஆனால் மரபுப் பிணங்களைப் பல்லக்குகளில் சுமந்து திரிகிறோம். ஏதோ ஒரு காலத்தில் தேவைக்காக ஏற்பட்ட மரபுகள் அந்த தேவை இல்லாது போன காலத்திலும் இருப்பதில் நியாயமில்லை. (சலவை மொட்டு, ப.27)

என்று கூறியுள்ளார். இதிலிருந்து ஒரு சமூகம் தன்னுடைய தேவைக்காகவே அனைத்து விதமான படைப்புகளையும் பயன்படுத்துகின்றது. அதிலும் மேலான ஒரு படைப்பு வந்துவிட்ட பின்னும் பழைய

படைப்பையே தாம் பயன்படுத்துவேன் என்பது மூடதனம். அது சமூக வளர்ச்சிக்கு எதிரானது என்பதை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும். இதனை வைரமுத்து,

எம்
புத்திலக்கியத்தில் தான்
வாழ்க்கை
விசாரணைக்கு வருகிறது.
இங்கு
பழையது ஒவ்வொன்றும்
பரிசீலிக்கப்படும்.

முள்ளை முள்ளால் எடுப்பது
முன்னோர் வழிதான்
ஆனால்
கண்ணுக்குள் விழுந்த முள்ளுக்கு
அந்தப்
பழையத் தத்துவம் பயன்படுமா? (வைரமுத்து கவிதைகள், ப.129)

பழைமைகளின் தேவைகள் இருப்பின் பயன்படுத்தலாம். தேவையற்ற பழைமைகள் இருப்பின் அதனை விளக்குவதே உண்மையான வளர்ச்சி என்பதை இக்கவிதை எடுத்துரைக்கின்றது.

காதல்

காதலிக்காத மனிதனே இருக்க முடியாது என்பதுதான் எதார்த்தமான உண்மை. சிலருடைய காதல் வெற்றியடைந்திருக்கலாம். சிலருடைய காதல் தோல்வியடைந்திருக்கலாம். அதுவல்ல இங்கு முக்கியம். காதல் தான் முக்கியம். இங்கு பலருடைய வெற்றி தோல்விகளை அவர்களுடைய காதல்தான் நிர்ணயித்துள்ளது. இது அழகிய அனுபவம் மட்டுமல்ல. வசந்த காலத்தின் வரவு. முழுநிலவொளியின் ஜொலிப்பு. இரசனையின் இரசிகை. இதனை,

எப்போதும்
என் இதயத்தில் இருந்துகொண்டு
வேத செய்கிறாள்
இவள்
ரகசியமாகச் செய்த
பாவத்தைப் போல (சலவை மொட்டு, ப.31)

என்று ஹாலன் என்பவர் தன் காதல் அனுபவத்தை கவிதையாகப் படைத்துள்ளார். அதேபோல் கஜல் கவிஞன் பாடுகின்றான்.

காதலி! உன்
உள்ளத்திற்குள் என்னை
ஒளித்து வைத்துக்கொள்
ஒரு பாவத்தைப் போல (சலவை மொட்டு, ப.30)

என்கின்றான் அவன். ஆட்யராயன் எனும் கவிஞன்,

முதல் பார்வை
அவள் அங்கங்களில்
எதில் விழுகிறதோ
அதிலேயே லயித்து விடுகிறது
எனவே
அவள்மேனி அழகை
முழுவதும் பார்த்தவர்
யாருமில்லை (சலவை மொட்டு, ப.32)

என்று பாடி கம்பனை கண்முன்னே காட்டிவிட்டான். காதலியையும் கூடத்தான். அவள் அழகை அவன் மெய்மறந்து இரசித்ததையும் இங்கே கவிதையாக்கியுள்ளான். இதே பாணியில் வைரமுத்து,

காதல்
மனிதனை தேவனாக்கும்
இரண்டாம் பரிணாமம் இது.

இந்தக்
காதல் மேகந்தான்
மனமென்னும் எரிமலையில்
மழைசிந்தி, மழைசிந்தி
அதில்
உல்லாச வனங்களை
உற்பத்தி செய்யும் (வைரமுத்து கவிதைகள், ப.173)

என்பதிலிருந்து காதலின் உயர்வை நாம் உணரலாம். மேலும் மு.மேத்தா முகம் தெரியாத அவளுக்காக எனும் கவிதையில்,

என் செய்தியை
நான் எழுதத் துடிப்பது
உன் இதயத்தில்தான்
அறிந்தும் அறியாதவள்போல்
நீஏன்
ஆட்டோகிராஃபை
நீட்டுகிறாய்? (கண்ணீர்ப்பூக்கள், ப.95)

எனத் தன் காதலை புரிந்துக் கொள்ளாத காதலியிடம் வினவுவதாய் இக்கவிதை நீண்டுச் செல்கிறது. இதன் வழி காதல் என்பது, நாடு, இனம், மொழி, சாதி, நிறம், அழகு எல்லாவற்றையும் கடந்த அழகிய அனுபவம் என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

ஓவியக் காதல்

நம்மில் பலருக்கு ஓவியத்தின் மீது அதீத காதல் ஏற்படுவதுண்டு. அப்படி கீட்ஸ் எனும் கவிஞன் கிரேக்கத் தாழியின் மீது வரைந்திருந்த காதலியை முத்தமிடத் துடிக்கும் காதலனின் ஓவியத்தைப் பார்த்துவிட்டுப் பாடுகிறான்.

துணிச்சலான காதலனே!
உன் லட்சியத்தை
நீ நெருங்கியிருந்தாலும்
ம்ஹூம்… உன்னால்
முத்தமிடவே முடியாது
இருந்தாலும் வருத்தப்படாதே
அவள் மங்கமாட்டாள்;
உன் பேரின்பத்தை
நீ அடையாவிட்டாலும்
நீ காதலித்துக் கொண்டே இருப்பாய்
அவள் அழகாகவே இருப்பாள்
- நிரந்தரமாக (சலவை மொட்டு, பக்.32-33)

இது காட்சியின்பத்தை நமக்குள் பாய்ச்சி நிற்கிறது. மேலும், பீமசாமி எனும் கவிஞன்,

வண்ணங்கள்
சரியாக அமையவில்லைதான்
இருந்தாலும்

இந்தச் சித்திரக் காதலர்
கொடுத்து வைத்தவர்
இவர்கள் எப்போதும்
பிரியவே மாட்டார்கள்(சலவை மொட்டு, ப.33)

என்று என்றும் பிரியா காதலர்களாக ஓவியக் காதலர்களை நம் கண்முன் காட்டியுள்ளார். இவ்வாறே பாரதிதாசனும்,

இருந்தபடி என்றன் நெஞ்சை இழுக்கும்
இருவிழி இன்பம் செய்யும் எனில் அவர்
திருந்துபடி ஓவியன் தீட்டிய ஓவச்
சேயிழை தன்னைத் திரும்பிப் பார்க்கும்
அவ்விரு விழியே துன்பம்
செய்வன! எவ்வகை உய்வேன் தோழியே! (பாரதிதாசன் கவிதைகள், ப.415)

என்று வடித்துள்ளார்.

காமம்

நம் சங்கப் பாடல்களில் கூட பரத்தைமை பேசப்பட்டுள்ளது. இங்கு கவிதையிலும் பேசப்படுகிறது. வாயில் வேண்டும் தலைவனுக்கு பரிந்து வருகிறாள் தோழி அவளிடம் தலைவி,

அவன் செய்த பிழைகளை
என் கண்ணாலேயே கண்டபிறகும்
எப்படி அவனை நேசிக்க முடியும்?
காய்ச்சப்பட்டு ஆறிய நீரில்
பழைய சுவை கிடைக்குமா? (சலவை மொட்டு, ப.34)

என்று தலைவனின் காமப்புணர்ச்சி குறித்து இடித்துரைக்கிறாள். இதனை பாரதிதாசன்,

வாழ்க்கையில் பங்கு கொண்டவள் நானா – அன்றி
வரவுக்கோர் இரவென்னும் அம்மங்கைதானா (பாரதிதாசன் கவிதைகள், ப.408)

எனும் கவிதையில் பரத்தையர் குறித்து விவரித்துள்ளார்.

ஊடலும் கூடலும்

தலைவன் பால் ஊடல் கொண்ட தலைவி அதில் உறுதியாக இருக்க வேண்டுமென எண்ணுகிறாள். ஆனால், அவள் மனமோ உறுதியிலிருந்து தளர்ந்து கொண்டே செல்கிறது. இதனை,

காதலன் பால்
ஊடிய தலைவி
மேலும் மேலும்
உறுதி கொண்டாலும்
அது
கொஞ்சம் கொஞ்சமாய்க்
குறைந்துக் கொண்டிருந்தது
கையில்
இறுக்கிப் பிடித்த
குறுமணல் போல (சலவை மொட்டு, ப.35)

காதல் எப்போதும் விட்டுக் கொடுக்கும் தன்மை உடையது. அன்பின் மிகுதியால் தவறு செய்திருந்தாலும் அவன் என் தலைவன் எனும் உரிமை அவளை மனமுருக செய்து மயக்கம் கொள்ள வைத்து இணைத்துவிடுகிறது.

தலைவி ஒருத்தி தலைவன்மீது அளவற்ற கோபத்தில் இருந்தால். அவள் கோபம் என்னவாயிற்று?

காதலன் மீது
தோன்றிய கோபம்
அவனைக் கண்டதும்
அகன்று ஓடியது
கணவனைக் கண்டதும் ஓடும்
கள்ளக் காதலன் போல(சலவை மொட்டு, ப.36)

என்ன உவமை உவமையைக் கண்டதும் வாயடைத்துப் போனேன்.

மசக்கை

மசக்கைக்காரியிடம் அவளின் தோழிகள் உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்க. அவளோ,

எது வேண்டும்? சொல்
என்றனர் தோழியர்
மசக்கை மங்கையோ
கணவனைப் பார்த்தாள்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

காதல் விழிகளால் (சலவை மொட்டு, பக்.35-36)

என்று தனக்கு தன் கணவனே அனைத்தும் என்பதை உணர்த்திவிடுகிறாள் அவள்.

வறுமை

வறுமை கவிஞர்களின் அடையாளம். அதனை கடந்திடாத மனிதனே இருக்க முடியாது. அது ஒருமுறையேனும் நம்மை உற்றுப்பார்த்துவிட்டுதான் செல்லும். அதனை,

கூரையில் ஒழுகும்
மழைநீர் விழாமல்
மகனைக் காத்த தாயின்
கண்ணீராலே
நனைந்தது குழந்தை (சலவை மொட்டு, ப.37)

ஓட்டைக்குடிசையின் ஒழுகலும், ஒரு தாயின் பாசமும் இங்கே கண்ணில் காட்சியாய் மலர்ந்து வறுமையின் கொடுமையைக் காட்சிப்படுத்துகிறது.

தாஜ்மஹல்

உலக பண்பாட்டுச் சின்னமாய் விளங்கும் தாஜ்மஹல் எல்லோருக்கும் காதலின் அடையாளமாய் இருக்க இங்கொரு கவிஞன் தன் காதலியிடம் கூறுகின்றான்.

இந்தப் பச்சைப் புல்வெளி
இந்த அலங்காரச் சுவர்கள்
ஆடம்பர மாடங்கள்
ஒரு மாமன்னன் பனத் தமிரால்
எங்களைப் போன்ற
ஏழைகளின் காதலை இங்கே
ஏளனம் செய்திருக்கிறான்
காதலி! நாம்
இந்த இடத்தில்
சந்திக்க வேண்டாம். (சலவை மொட்டு, ப.39)

சாஹிர் எனும் கவிஞன் இதை காதலின் சின்னமாகப் பார்க்கவில்லை. அம்மன்னனின் செல்வத்தைத் தான் பார்க்கிறார். இதற்குப் பதிலுரைக்கும் கவிஞர் ஷகில்,

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2025, IRJTSR

அரசன் ஒருவன்
அழகிய தாஜ் மஹலைக்
கட்டியதன் மூலம்
அகில உலகத்திற்கும்
ஒரு காதல் சின்னத்தைத்
தந்திருக்கிறான்
இதன் நிழலில் எப்போதும்
காதல் பேசப்படும்
என்றைக்கும் முடியாத கதையை
அவன் இங்கே எழுதியிருக்கிறான்

தாஜ் மஹல்....
காதல் ஆலயத்தின்
காந்த தீபம்

அதைச் சுற்றும் விட்டில்களில்
ஏழைகளும் உண்டு.
செல்வர்களும் உண்டு. (சலவை மொட்டு, பக். 40-41)

என்று கூறி தாஜ்மஹல் ஏழை, பணக்காரன் என்ற பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டது. அது காதலின் சின்னம், காதல் உள்ளவரை அதுவும் நிலைத்திருக்கும் என்பதை உறுதி செய்துள்ளார்.

நானாலால் எனும் குஜராத்திய கவிஞன் இன்னும் ஒருபடி மேலேபோய்,

கலைக்க முடியாத
திருமணத்திற்கான
அழகிய மணப் பந்தலா இது? (சலவை மொட்டு, ப.42)

என்கிறார். மணவாழ்க்கையில் நிறைவெய்திய காதலர்களின் அழகிய உணர்வின் வெளிப்பாடாக இதனை அவர் காண்கிறார்.

கவிஞனின் சிகரெட்

கவிஞர் அம்ரிதா ப்ரீதத்தின் சிகரெட் பழக்கம் எப்படி கவிதையானது தெரியுமா?

ஒரு வேதனை இருந்தது

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

அமைதியாக அதைப்
புகைத்தேன்
ஒரு சிகரெட்டைப் போல்

சில பாடல்களை
உதிர்த்தேன்
சிகரெட்டின்
சாம்பலைப் போல் (சலவை மொட்டு, ப.46)

வேதனையில் சிகரெட்டைப் புகைத்து அதிலிருந்து புகை வருவதைப் போல் பாடல்களை எழுதினேன் என்கிறார். கவிஞர்கள் துன்பத்தில் இருக்கும் போது கவிதைகளை உணர்ச்சி பொங்க படைப்பர். அவ்வாறு படைக்கப்பட்ட கவிதைதான் இதுவும் போலும்.

புகைப் பிடிப்பதினால் ஏற்படும் ஆபத்தை,

சிகரெட் பெட்டிகள்
சின்னச் சின்னச் சவப்பெட்டிகள்
மரணம் அவற்றுள்
உறங்கி வசிக்கிறது. (வைரமுத்து கவிதைகள், ப.269)

என்று வைரமுத்து கூறியுள்ளார்.

முடிவுரை

அப்துல்ரகுமானால் சலவை மொட்டு எனும் நூல் பல்வேறு மொழிக் கவிஞர்களின் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து அளிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தாய்மையின் உயர்வு, அன்பு எனும் சொல்லுக்குரியவள் பெண் என்பதையெல்லாம் அழகாகவும் ஆழமாகவும் கவிதைகளால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி தாஜ்மஹல் காதலின் சின்னம் எனும் போது ஒரு கவிஞர் அதனை பணத்திமிர் என்கிறார். அதற்காக, எதிர்வாதமான பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளதை மேற்கோளாகக் கொண்டு அது காதலின் சின்னமே என்றுரைக்கப்பட்டது. வறுமை போக வேண்டுமெனில் நம் உடைமைக்காக போராட வேண்டும் என்பதையும் இந்நூல் எடுத்துரைத்துள்ளது. காதலின் உயர்வு, ஓவியக் காதல், ஊடல், பரத்தமை போன்றவைகள் எல்லாம் மனித காதலின் உச்சத்தை நமக்கு உணரத்தருகின்றன. அந்த வகையில் இக்கட்டுரை காதல், வறுமை, பெண்மை என இந்நூலில் உள்ள சமூகச் சிந்தனையை அடையாளம் காட்டியுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. அப்துல்ரகுமான், சலவைமொட்டு, மலர்விழி பதிப்பகம், வேலூர், 1986.
2. பொன்மணி வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், சூர்யா வெளியீடு, சென்னை, 2002.
3. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை உரை, திருக்குறள்,பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2006.
4. சந்திரமதி(பதி.), பாரதிதாசன் கவிதைகள், லியோ புக் பப்ளிஷர்ஸ், 2011.
5. மேத்தா. மு, கண்ணீர்ப் பூக்கள், குமரன் பதிப்பகம், சென்னை, 2004.

References

1. Abdul Rahman, Salavaimottu, Malarvizhi Press, Vellore, 1986.

2. Ponmani Vairamuthu, Vairamuthu Kavithaigal, Surya Publications, Chennai, 2002.

3. Namakkal Poet Ramalingam Pillai, Thirukkural, Poompuhar, Chennai, 2006.

4. Chandramathi (Ed.), Bharathidasan Kavithaigal, Leo Book Publishers, 2011.

5. Mehta.M., Kanneer Pookkal, Kumaran Publications, Chennai, 2004.